தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் கல்லூரி சாலை, சென்னை 6

மூ. மு. எண்.939/இ6/2007, நாள். 23 02.2007.

பொருள்: மெட்ரிகுலேஷன் பள்ளிகள் – கோவை மாவட்டம், ஓமலூர், மைக்கேல்ஜாப் மெமோரியல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சூலூர் – தற்காலிக அங்கீகாரம் 1 – 12 வகுப்புகளுக்கு 01.09.2005 முதல் 31.08.2008 வரை தற்காலிக அங்கீகாரம் வழங்குதல் ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை. 1.அரசாணை பல்வகை எண்.188 பள்ளிக் கல்வித் துறை நாள் 8.11.2001
2. அரசு கடிதம் எண்.39488.யு2/பள்ளிக் கல்வி 2001 நாள்.18.12.2001
3. அரசாணை நிலை எண்.54 பள்ளிக் கல்வித் துறை நாள்.30.04.2004
4. அரசாணை (2டி) எண்.48 பள்ளிக் க்ல்வி (எக்ஸ்2) துறை நாள்.21.7.04
5. அரசாணை பல்வகை எண் 48 பள்ளிக் கல்வி (டி1) 22.7.04
6. அரசாணை பல்வகை எண்.99 பள்ளி )எக்ஸ்2) துறை நாள் 10.6.2004
7. அரசாணை பல்வகை எண்.122 பள்ளிக் கல்வி (எக்ஸ் 2) துறை நாள்.14.9.2004
8. கோவை, மெட்ரிக் பள்ளி ஆய்வரின் கடித எண். 2208/ஆ/05, நாள். 04.09.2006.

---------

பார்வை 1, 3 முதல் 7ல் கண்டுள்ள அரசாணைகள், பார்வை 2ல் கண்ட அரசு கடிதம் ஆகியவற்றின் அடிப்படையிலும், பார்வை 8ல் கண்ட மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் ஆய்வரின் பரிந்துரையின் அடிப்படையிலும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதிதொகுப்பின் அடிப்படையிலும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரால் கிழ்க்காண் பள்ளியின் தற்காலிக அங்கீகாரம் கோரிக்கை கவனமுடன் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ளபடி தற்காலிக அங்கீகாரம் வழங்கி ஆணை வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| நிர்வாக அறக்கட்டளையின் பெயர் | மைக்கேல் ஜாப் மேமொரியல் எஜிகேஷன்ஸ் அண்ட் மெடிக்கல் டிரஸ்ட் |

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட ஆண்டு | 2001 |

துறை அனுமதியுடன் பள்ளி துவங்கப்பட்ட கல்வி ஆண்டு 2000

| பள்ளியின் பெயர் | வகுப்புகள் | காலம் |
|---|---|---|
| மைக்கேல் ஜாப் மெமோரியல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சூலூர். | 1 முதல் 10 வகுப்புகள்<br>11 ஆம் வகுப்பு<br>12 ஆம் வகுப்பு | 01.09.2005 முதல் 31.08.2008 வரை<br>01.06.2006 முதல் 31.08.2008 வரை<br>01.06.2007 முதல் 31.08.2008 வரை |

இப்பள்ளி நிர்வாகம் பார்வை 3ல் குறிப்பிடப்பட்ட அரசாணையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிர்வாக பங்குத்தொகை செலுத்தியுள்ளது

| தொகை | செலுத்துச் சீட்டு எண் | நாள் | கருவூலத்தின் பெயர் |
|---|---|---|---|
| ரூ.10,000/– | 37 | 01.08.2002 | சார்நிலைக் கருவூலம், பல்லடம். |

பள்ளி அமைவிடம் சார்பான விபரம்

| பள்ளி அமைந்திருக்கும் பகுதி | வரையறுக்கப்பட்டபடி பள்ளிக்கு இருக்க வேண்டிய இடத்தின் பரப்பளவு | தற்போது இருக்கும் இடத்தின் பரப்பளவு | குறைபாடு |
|---|---|---|---|
| பேரூராட்சி | 1 ஏக்கர் | 5.27 ஏக்கர் | –– |

பள்ளிக் கட்டிடத்தின் விவரம் சதுர அடி

| ஆர் சி சி | ஆஸ்பெஸ்டாஸ் | ஓடு வேய்ந்தது | இதர வகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 26748 | –– | –– | –– | 26748 |

| ஆய்வகம் சதுர அடி | | நூலகம் | | |
|---|---|---|---|---|
| ஆய்வகத்தின் பரப்பளவு | அறைகளின் எண்ணிக்கை | நூலகப் புத்தகங்கள் இருக்க வேண்டியது | தற்போது இருப்பது | குறைபாடு |
| இயற்பியல் – 520<br>வேதியியல்–520<br>உயிரியல் – 520<br>கணனி – 520 | 4 | 3000 | 2210 | 790 |

| பணியாற்றும் ஆசிரியர்கள் | | | பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் | பயிற்சி பெறாதவர்கள் | மொத்தம் | 280 |
| 10 | 3 | 13 | |

| கட்டிட உறுதிச் சான்று | | | கட்டிட உரிமை சான்று | | |
|---|---|---|---|---|---|
| முதல் | வரை | எண்ணிக்கை | முதல் | வரை | எண்ணிக்கை |
| 27.01.2006 | 26.01.2009 | 1200 | 27.01.2006 | 26.01.2009 | 1200 |

| | |
|---|---|
| தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையால் தடையின்மைச் சான்று வழங்கப்பட்ட நாள் | 18.12.2004 |

| | |
|---|---|
| சுகாதாரச் சான்று வழங்கப்பட்ட நாள் | 30.06.2005 |

சுகாதாரச் சான்று புதுப்பிக்கப்பட்டு மெட்ரிக் பள்ளிகள் ஆய்வருக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

இப்பள்ளி நூலகத்தில் 2210 புத்தகங்கள் மட்டுமே உள்ளன. ஆனால் 3000 புத்தகங்கள் இருக்க வேண்டும். உடனடியாக இக்குறை நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

இப்பள்ளியில் 03 பயிற்சி பெறாத ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 5 ஆண்டு காலத்திற்குள் இவர்கள் தமது பதவிக்குரிய ஆசிரியப் பயிற்சி பெற வேண்டும்.

கட்டிட உரிமம், உறுதிச் சான்று மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையின் டையின்மைச் சான்று இல்லாத கட்டிடங்களில் வகுப்புகள் நடத்தக் கூடாது என அறிவிக்கலாகிறது.

தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குப்படுத்தும் விதித் தொகுப்பு பகுதி 2ல் குறிப்பிடப்பட்ட விதிகள் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இல்லையெனில் தொடர் அங்கீகாரம் விதி 10 (v) உட்கூறு (i) 11 (a) மற்றும் 11 (b) ன்படி திரும்பப் பெற்று ஆணை வழங்கும் நிலை ஏற்படும்.

தற்காலிக அங்கீகாரம் முடிவடையும் முன்னர் அதாவது 3 மாதங்களுக்கு முன்னரே தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குப்படுத்தும் விதித் தொகுப்பின் விதி 10(iii) ன்படி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வரின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

இச்செயல்முறைகளின் பின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் பின் இணைப்பு இவ்வாணையின் பகுதியே எனவும் அறிவிக்கலாகிறது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்.

23.2.07

இணைப்பு: பின் இணைப்பு

பெறுநர்

பள்ளிக் கல்வி முதன்மைச்/தாளாளர்

மைக்கேல் ஜாப் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, ராவத்தூர் போஸ்ட், இருகுளூர் வழி, சூலூர், மாவட்டம் கோவை

அஞ்சல் குறியீட்டெண். 641 103.

நகல்: மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வர், கோவை,**
நகல்: முதன்மைக் கல்வி அலுவலர், கோவை.
நகல்: அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை 6

** இப்பள்ளிக் கட்டிடம் சார்பாக ஏற்பளிக்கப்பட்ட கட்டிட வரைபட நகலை பள்ளியிலிருந்து பெற்று தமது சான்றொப்பத்துடன் இப்பள்ளி அங்கீகாரம் சார்பான தமது அலுவலகக் கோப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

தனி இணைப்பு

## மூ. மு. எண்.939/இ6/2007, நாள். 23 02.2007.

பள்ளியின் பெயரில் 7 ஆண்டுகளுக்கு வைப்பு தொகையாக வைக்கப்பட்ட அறக்கட்டளை நிதி அக்காலம்

1. முடிவதற்கு முன்னர் எடுக்கப்படக் கூடாது.
   பள்ளியின் பெயரில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ள அறக்கட்டளை நிதி 7 ஆண்டுகள்
2. முடிவடைந்தவுடன் புதுப்பிக்கப்பட வேண்டும்.
   வைப்புத் தொகை அசல் ரசீது மற்றும் வங்கி பாஸ்புத்தகம் எப்பொழுதும் பள்ளியில் இருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு நிதியாண்டும் இப்பள்ளியின் வரவு செலவுக் கணக்கு பட்டயக் கணக்காளர் (chartered
4. Accountant) தணிக்கை செய்யப்பட்டு சான்று பெற்று மெட்ரிக் பள்ளி ஆய்வாளரிடம் தணிக்கை முடிவுற்ற ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. பள்ளிக் கட்டணத்தைத் தவிர்த்து நன்கொடை எதுவும் வசூலித்தல் கூடாது.
6. இவ்வாணையினை முன் நிபந்தனையாக வைத்து பள்ளிகள் நடத்தக் கூடாது.
7. இப்பள்ளியினைத் தவிர்த்து வேறு பள்ளிகள், நிறுவனங்கள் இப்பள்ளி வளாகத்தில் செயல்படக்கூடாது.
8. அங்கீகாரம் அனுமதிக்கப்பட்ட வகுப்புகளின் விவரமே அறிவிப்புப் பலகையில் இடம்பெற வேண்டும்.
9. குடியிருப்பு வீடுகள், வணிக அறைகள் எதுவும் பள்ளியின் வளாகத்திற்குள் இருத்தல் கூடாது.
10. கட்டிட உரிமம் கட்டிட உறுதிச் சான்று சுகாதாரச் சான்று மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையின் தடையின்மைச் சான்றுகளின் காலம் முடிவடையும் முன்னர் புதுப்பிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட சான்றுகள் இல்லாமல் பள்ளி செயல்படக் கூடாது என்றும் இதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு பள்ளித் தாளாளரே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.
11. ஒவ்வொரு மாணாக்கருக்கும் 9 முதல் 10 சதுர அடிக்குக் குறையாமல் இட வசதியுள்ள வகுப்பறைகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
12. இப்பள்ளியில் பயிலும் அனைத்து மாணாக்கருக்கும் முழுமையான பாதுகாப்பு அளிப்பது பள்ளித் தாளாளர் மற்றும் முதல்வரின் தலையாய கடமையாகும். இதில் தவறினால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு நிர்வாகமே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும்.
13. அவசரக் காலங்களில் மாணாக்கர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் உடனடியாக எளிதில் வெளியேறத் தக்க வகையில் பள்ளியில் போதுமான வாயில்கள் மற்றும் படிக்கட்டு வழிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
14. கட்டிட உரிமம் மற்றும் கட்டிட உறுதிச் சான்றில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கைக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் கூடுதல் சேர்க்கை இருத்தல் கூடாது.
15. மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பினைக் கட்டிடம் விளையாட்டு மைதானம் மற்றும் தோட்டங்களில் ஏற்படுத்த வேண்டும்.
16. தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குப்படுத்தும் விதி தொகுப்பு விதி 17யின் இணைப்பு (VI) ல் குறிப்பிட்டுள்ளபடி முழுக் கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்களையே நியமனம் செய்ய வேண்டும்.
17. பயிற்சிச் சான்று தடை செய்யப்பட்ட துறை தண்டனை/நீதி மன்ற தண்டனை பெற்று சான்று ரத்து செய்யப்பட்ட ஆசிரியர்களை நியமனம் செய்தல் கூடாது.
18. ஆசிரியர்களின் பொதுக் கல்வி தொழிற்கல்வி சான்றுகளின் அசல் அந்தந்த ஆசிரியரிடமே இருத்தல் வேண்டும் பள்ளியில் அச்சான்றுகளின் புகைப்பட நகல் மட்டும் வைக்கப்படுதல் வேண்டும்.
19. மாற்றுச் சான்று/பதிவுத் தாள் ஆகியவை அனைத்து மாணாக்கர் சார்பாக முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.
20. மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் சிறப்பு அனுமதியின்றி கல்வி ஆண்டின் நடுவில் மாற்றுச் சான்று வழங்குதல் கூடாது.
21. 10 மற்றும் 12ம் வகுப்பு பாடங்கள் முறையே 9 மற்றும் 11ம் வகுப்பில் முன்னதாகவே மாணாக்கருக்கு நடத்தக் கூடாது.
22. பள்ளியில் பயிலும் 10ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் அந்தக் கல்வி ஆண்டிலேயே அரசு பொதுத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டும். அரையாண்டுத் தேர்வு பொதுத் தேர்வு எழுதத் தகுதித் தேர்வாக அமையாது என அறிவுறுத்தப்படுகிறது.
23. நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளுக்கு அவ்வப்போது வழங்கப்படும் ஆணைகளைத் தவறாது செயல்படுத்த வேண்டும். இல்லையெனில் தானாகவே அளிக்கப்பட்ட தகுதியினை இப்பள்ளி இழந்ததாக ஆகிவிடும்.
24. மேற்குறித்த நிபந்தனைகள் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். இல்லையெனில் அங்கீகாரம் திரும்பப் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.